# தொண்டன்

ஆரம்பம்: 1969–பெப்ரவரி



## இதயங்கள் தேடிய உதயம் பூக்கட்டும் புதிய வசந்தம்

ஜூன் – 2008 சமய – சமூக – இலக்கிய வெளியீடு 20/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IT Solution

*Total Solution For Your Information Technology Needs*

**Thangarajah Raajkumar** Comp. Eng
Managing Dierctor

intel
Leap ahead

## Unrivaled processor performance.
## Ground breaking energy efficiency.

### Introducing the Intel® Core™2 Duo desktop processor.

**Up to 40% faster performance1**

- Significant performance gains with dual-core technology
- Increased system responsiveness for single and multithreaded applications

**Over 40% more power efficient1**

- Enables smaller PC design options
- Enables quieter PC operation

intel
Core 2
Duo
inside™

**Ask for a demo today!**

**No - 233, Trinco road, Batticaloa. Sri Lanka.**
**Tel: 065 - 2224857, 4900141 Mobile: 071 - 3434634**
E-mail: itsolution@sltnet.lk, info@itsolutionweb.com
Web: www.itsolutionweb.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஜூன் - 2008

மலர்- 40 இதழ்- 05

**ஆசிரியர்**

றொஹான் பேனார்ட்

**இணை ஆசிரியர்**

மலர்வேந்தன்

**துணை ஆசிரியர்கள்**

மெற்றில்டா இராஜேந்திரம்

பெஸ்லீயோ வாஸ்

வயலற் சந்திரசேகரம்

**வெளியீடு**

சமூகத் தொடர்பு நிலையம்.

திரு / மட். மறை மாவட்டம்

**முகவரி**

சமூகத் தொடர்பு நிலையம்

அ.பெ.எண் - 44

மட்டக்களப்பு.


# உள்ளே




| | | |
|---|---|---|
| அன்புடன் உங்களோடு.... | - | 02 |
| தூய வாழ்வு... | - | 03 |
| பதுவைப் புனித... | - | 05 |
| வாழ்க்கை... | - | 07 |
| புதிய ஏற்பாட்டு ஒழுக்க... | - | 08 |
| உங்கள் சுகமான... | - | 10 |
| மாணவர் பக்கம்... | - | 11 |
| இலக்கிய மஞ்சரி... | - | 12 |
| மட். திருமலை மறைமாவட்ட.... | - | 13 |
| தேனாடு கண்ட.... | - | 14 |
| தொண்டனின் சில நிமிடங்கள்... | - | 19 |
| தமிழக நுண்கலை... | - | 21 |
| எனது பயணங்களில்... | - | 23 |
| போட்டி முடிவுகள் - 64 | - | 26 |
| விவிலியம் கற்போம்... | - | 27 |
| அறிவை வளர்ப்போம்... | - | 28 |


ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)


SOCIAL COMMUNICATIONS CENTRE

P.O. BOX - 44

BATTICALOA.

TEL: 065 - 2226486


விலை : 20/=

ஆண்டு சந்தா : 350/=

(தபாற்செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு...

ஒரு மாத காலத்திற்குள் அனேக நிகழ்வுகள் நடந்தேறிவிட்டன. அவை யாவற்றையும் பட்டியலிடுவதைவிட எம்மையெல்லாம் ஒரு கணம் உலுக்கிவிட்ட விடயங்களைப் பார்ப்போமாகில், முதலில் நடந்துமுடிந்த கிழக்கு மாகாண சபைத் தேர்தலையும் அதனோடு இணைந்த அசம்பாவிதங்களையும் நோக்க முடியும். அந்த வகையில் தேர்தல் நியாயமான முறையில் இடம்பெற்றதென்பது கேள்விக்குறிதான். ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணி வெற்றி பெற்றிருந்தாலும்கூட, மாகாணசபை முதல்வரால் தானும் தன் கட்சியும் முன்வைக்கின்ற கோரிக்கைகளையும், வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்க முடியும் என்று நினைப்பது கானல் நீர்தான்.

ஏனெனில் ஓடும் புளியம்பழமும்போல் வாழ்ந்துவரும் கிழக்கு மாகாண தமிழ், முஸ்லிம் மக்களிடையே தற்போது முறுகல்நிலை ஏற்பட்டுள்ளது. இதற்குத் தூபமிடுபவர்கள் யார்? சூத்திரதாரிகளைக் கண்டறிந்தாலும் எல்லாத் தரப்பினரிடத்திலும் தற்போது ஆயுதம் புழக்கத்தில் உள்ளது என்பது வெளிச்சத்திற்கு வந்துவிட்ட விடயம். அந்த வகையில் நோக்கும்போது கிழக்கு மீட்கப்பட்டுவிட்டது என்று தம்பட்டம் அடிப்பது ஒரு பித்தலாட்டமாகும் என்பதை வெளியுலகு நன்கு அறிந்தவண்ணமே இருக்கிறது.

தேர்தலுக்காகப் போடப்பட்ட வீதித் தடைகளும், சோதனைச் சாவடிகளும் இன்னும் அகற்றப்படவில்லை. மாறாக இராணுவ மற்றும் பொலிஸ் கெடுபிடிகளும், சுற்றிவளைப்புகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. கிழக்கை முழுமையாகக் கைப்பற்றிவிட்டதாகக் கூறும் அரசின் இத்தகைய நடவடிக்கைகள் அதன் கூற்றுகளையே கேள்விக்குள்ளாக்குகின்றன.

சொல்வது ஒன்றும் செய்வது வேறொன்றுமாக இருக்கும் அரசின் நடவடிக்கைகள்தான் இன்று அனைவரின் மத்தியிலும் அவநம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன. உண்மையில் இலங்கையில் பதவிக்கு வந்த அரசாங்கங்களின் கடந்தகால வரலாற்றை மீட்டுப் பார்ப்பவர்களுக்கு இதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. ஆனால், சர்வதேச நாடுகள்தான் காலங்கடந்து புரிந்துகொள்ளத் தலைப்பட்டுள்ளன. அதன் விளைவுகள்தான் ஐ.நா மனித உரிமைகள் அமைப்பிலிருந்து இலங்கை அரசு வெளியேற்றப்பட்டது. ஆனால், இலங்கை அரசின் நடவடிக்கைகளில் எந்த மாற்றமும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. மனித உரிமை மீறல்கள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. "அடிக்க அடிக்க அம்மியும் நகரும்" என்பார்கள். இந்த அரச அம்மி நகர இன்னும் எத்தனை...........................!

தொடரும் யுத்தம், எரிபொருள் விலை உயர்வு, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், இலங்கை மக்கள் நெருப்புக்குள் நிற்கிறார்கள். எவ்வளவு காலத்துக்கு நிற்கமுடியும்? இதன் எதிரொலிப்புகள் தென்னிலங்கையிலும் கேட்கத் தொடங்கிவிட்டன. போர் வெறியையும், பிடிவாதங்களையும் பொறுப்புள்ளவர்கள் கைவிடாவிட்டால் காலம் தன் கடமையைச் செய்யும்.

**- ஆசிரியர்**



## இறைவாக்கு

**நீதி வெள்ளமெனப் பொங்கி வருக!**

**நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வருக!**

(ஆமோஸ்: 5:24)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னை திரேசா மரணப் படுக்கையில் இருந்த நேரம் பத்திரிகையாளர் ஒருவர் அவரைப் பார்த்து "உங்களை எல்லோரும் வாழும் புனிதர் என்று கருதுகிறார்கள். இந்த உலகிலேயே ஒரு புனிதராகக் கருதப்படுவது என்ன விதமான உணர்வைத் தருகின்றது" என்று கேட்டார். அதற்கு அன்னை திரேசா, "புனிதமான வாழ்வு என்பது ஒரு சிலருக்குக் கொடுக்கப்பட்ட ஆடம்பரம் அல்ல; மாறாக ஒவ்வொருவரும் வாழ்ந்து காட்டவேண்டிய கடமை" என்று சொல்லிவிட்டு தன்னைக் கேள்வி கேட்ட அந்தப் பத்திரிகையாளரை உற்றுநோக்கி, நீ ஒரு பத்திரிகை யாளன். உன்னுடைய பத்திரிகைப் பணியிலேயே புனித முள்ளவனாக இருப்பதுதான் கடவுள் உனக்குக் கொடுக்கும் அழைப்பு" என்றாராம்.

"நாம் தூயோராகவும், மாசற்றோராகவும் தம் திருமுன் விளங்கும்படி.... கடவுள் நம்மை கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார்" என்று புனித பவுலடியார் கூறுகிறார். கடவுளது அழைப்பை ஏற்று பிறருக்கு நற்செய்தி அறிவிக்குமுன் நமக்கு நாமே நற்செய்தி அறிவிப்பது அவசியமானது. பிறருக்கு நற்செய்தி அறிவிக்கும் கருவியாக மாற்றப்படுமுன் எசாயா நெருப்பினால் தூய்மைப்படுத்தப்படுகிறார் (எசாயா 6:6) அதேபோல எரேமியாவும் இறைவனால் தொடப்பட்டு தூய்மைப்படுத்தப்படுகிறார் (எரேமியா 1:9)

நாம் அறிவிக்கும் நற்செய்தியால் தொடப்படும் மக்களின் எண்ணிக்கையை விட நமது தூய வாழ்வினால் தொடப்படுகின்ற மக்களின் எண்ணிக்கைதான் அதிகம். எனவேதான் புனித பவுல் திருத்தொண்டர்களின் பண்பு நலன்களைப் பற்றிப் பேசும்போது அவர்கள் குறைசொல்லுக்கு ஆளாகாதவர்களும் (1திமொ 3:2) எல்லோரிடமும் நற்சான்று பெற்றவர்களாகவும் (1திமொ 3:9) இருக்கவேண்டும் என்றும் கூறுகிறார். இராபட் முர்ரே என்ற அறிஞர் "ஒரு தூய்மையான மனிதன் கடவுளின் கையிலிருக்கும் ஒரு வலிமையான ஆயுதம்" என்று கூறுகின்றார்.

# தூய வாழ்வு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.மு 8ம் நூற்றாண்டின் மையப்பகுதியில் இஸ்ராயேல் நாட்டில் அநீதி தலைவிரித்தாடியது, நேர்மை கைவிடப்பட்டது. நீதியை நிலைநாட்ட வேண்டிய அரசனோ சுகபோகத்திலும் போலி வழிபாட்டிலும் மூழ்கியிருந்தான். இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் ஆமோஸ் நீதியின் சார்பாக நிலைப்பாடு எடுக்க இறைவனால் அழைக்கப்பட்டார்.

இஸ்ரயேல் அரசனையும், மக்களையும், குருக்களையும் பார்த்து "நீங்கள் நீதியை நஞ்சாக மாற்றினீர்கள், நேர்மையின் கனியை எட்டிக்காயாக ஆக்கினீர்கள்" (ஆமோஸ் 8:12) என்று சீறுகிறார். இவ்வாறு உரைத்ததன் காரணமாக அமாட்சியா என்ற குரு ஆமோஸைக் கண்டிக்கிறார். அவரைப்பற்றி அரசனிடமும் தெரியப்படுத்துகிறார். இந்த அமாட்சியா பெத்தேலில் உள்ள அரசனின் ஆலயத்தில் குருவாக இருந்தவர். கடவுளைவிட அரசருக்கு விசுவாசமாக இருந்தவர். அமாட்சியாவின் இந்தச் செயலின் காரணமாக அரசனிடம் இருந்து தனக்குத் துன்பங்கள் வரும் என்பதை ஆமோஸ் அறிந்திருந்தாலும், தன் நீதியின் சார்பான நிலைப்பாட்டில் கொஞ்சமும் பின்வாங்காமல் தன் அழைப்பு வாழ்வில் முன்னேறினார்.

நீதியையும் நியாயத்தையும் விலைபேசி விற்கும் கயவர்கள் வாழும் இன்றைய சூழ்நிலையில் நீதியின் தூதுவர்களாய் வாழ இறைவன் நம்மை அழைக்கின்றார். கர்தினால் சுயன்ஸ் கூறுவதை மனதில் இருத்துவோம். "இயேசுவின் நற்செய்தியை ஏற்றுக்கொள்வது ஒரு சமூகப் புரட்சியைச் சுட்டிக்காட்டுகிறது. இந்தச் சமூகப் புரட்சி வாயிலாகப் பசித்தோருக்கு உணவு கிடைப்பதுடன், நீதி அனைத்து மக்களின் உரியையாகக் கருதப்படும்." அதாவது 'அனைவருக்கும் சமநீதி' என்பது நற்செய்தியின் சாராம்சம். இந்த இலக்கை நோக்கி உழைக்க நாம் அழைக்கப்படுகிறோம்.

**- அருள்தந்தை டக்ளஸ் ஜேம்ஸ் -**





## முதன் முதல் போரில் ராக்கெட்டைப் பயன்படுத்திய நாடு !

இன்று ராக்கெட்டுகள் , ஏவுகணைகள் என்று ஒவ்வொரு நாடும் செய்தும், வாங்கியும் குவித்து வைத்துள்ளன. இவை யுத்தங்களில் பயன்படுத்தப்பட்டு பேரழிவையும் உண்டாக்குகின்றன. இந்த ஆயுதங்களின் பயன்பாட்டால் அழிபவர்கள் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள வீரர்கள் மட்டுமல்ல பெருமளவில் அப்பாவிப் பொதுமக்களே. யுத்தத்தில் பொதுமக்கள் - வயோதிபர், குழந்தைகள், பெண்கள், பாதிக்கப்படக் கூடாது என்று நாள்குறித்து, இடம் குறித்து போர் செய்த காலமெல்லாம் வரலாறாகிப் போய்விட்டன. இன்று யுத்தத்தில், யுத்தத்தின் பெயரால் கொல்லப்படும் அப்பாவி மக்களின் உடல்களின் எண்ணிக்கையிலேயே வெற்றி பேசப்படுகிறது. அது சரி, இந்த ராக்கெட்டை முதன் முதல் போரில் பயன்படுத்திய நாடு எதுவென்று தெரியுமா?

அமெரிக்கா? பிரித்தானியா? ஜெர்மனி? பிரான்ஸ்? ரஷ்யா? ம்..ஹூம்... எதுவுமே இல்லை. அந்தப் பெருமை இந்தியாவுக்கே உரியது. பயன்படுத்திய அரசன் திப்பு சுல்தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதுவைப் புனித அந்தோனியார்

கோடி அற்புதரான புனித அந்தோனியாரின் பெருவிழா இம்மாதம் (ஆனி) 13ம் திகதி கொண்டாடப்பட்டது. இலங்கையின் தலை நகரிலுள்ள கொச்சிக்கடை அந்தோனியார் கோயில் மிகப் பிரபல்யமானது. 174 வருடகால சரித்திரப்புகழ் பெற்றதும் கூட. இங்கு கோயில் கொண்டுள்ள புனித அந்தோனியாரிடம் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பக்தகோடிகள் கேட்கும் வரங்களைப் பெற்று மகிழ்கின்றனர்.



புனித அந்தோனியார் போர்த்துக்கல்லில் உள்ள லிஸ்பன் நகரில் 1195ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15ம் திகதி பிறந்தார். இவரது தந்தை பெயர் மாட்டீன் புய்யோன், தாய் பெயர் திரேசா திவேரா. புனித அந்தோனியாரின் இயற்பெயர் பெர்டினன்ட். இவர் துறவிகள் சபையில் சேர்ந்தபோது தனது பெயரை அந்தோனி என மாற்றிக்கொண்டார். தமது 15வது வயதில் அகுஸ்தீன் துறவறசபையிற் சேர்ந்தார். விவிலிய அறிவிலும், கல்வியிலும் விற்பனராக விளங்கினார்.

அக்காலத்தில் பிரான்சிஸ்கன் சபைத் துறவிகள் பலர் வேத சாட்சிகளாக இறந்த நிகழ்வுகள் இவரது இதயத்தைத் தொட்டன. அதனால் பிரான்சிஸ்கன் சபையில் சேர பெரிதும் ஆர்வம் கொண்டார். எதிர்பாராத விதமாக சிசிலித் தீவுக்கு அருகில் உள்ள அசிசி நகரில் பிரான்சிஸ்கு பொதுக் கூட்டத்தில் உரையாற்ற வாய்ப்புப்பெற்று உரையாற்றினார். இவ்வுரையாற் கவரப்பட்ட பிரான்சிஸ்கு அவர்களே தமது சபையின் பிரதான போதகராக இவரைத் திருநிலைப்படுத்தினார். இவரது பணி பரவலாகத் தொடர்ந்தது. ஆல்ஸ், மொன்ட், பெர்லியா, பூர்ஜெசி, இத்தாலி, வேர்செல்லி, ரிறிமினி, பதுவை ஆகிய பட்டணங்களில் பிரகாசித்தது. இதனால் இவர் பதுவைப் பதியர் என அழைக்கப்பட்டார். 13ம் சிங்கராய பாப்பரசர் இவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினாராம், "புனித அந்தோனியார் பதுவையின் பாதுகாவலர் மாத்திரமன்றி உண்மையாகவே அகில உலகத்தின் புனிதராகவும் இருக்கிறார்"

பன்மொழி பேசும் வரமும் ஒரே வேளையில் இரண்டு இடங்களில் காணப்படும் வரமும் பெற்றவர். புனித அந்தோனியார், நோய்களைக் குணமாக்கி, பேய்களை விரட்டி, இறந்தோரை மீண்டெழவும் செய்தார். பொய்க்குற்றஞ் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த தனது தந்தையைக் காப்பாற்ற இறந்தவனையே உயிர்பெறச்செய்து மீண்டும் நீதிமன்றத்தில் நிறுத்தியமை அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்த செயலாகும்.

புனித அந்தோனியார் இறுதியாகப் பணியாற்றிய இடம் பதுவையாகும். 1231ம் ஆண்டு 36 வயதில் பதுவையிலே மரியாளின் பாடலைப் பாடியபடி மரணமானார். ஆனி மாதம் 13ம் நாள் இறைவனடி சேர்ந்ததால் அன்று அவரது தினமாகக் கொண்டாடப்படுகிறது. ஆனி 17ம் திகதி செவ்வாய்க்கிழமை அடக்கம் செய்யப்பட்டார்.

1232ம் ஆண்டு வைகாசி மாதம் 30ம் திகதி புனிதராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1263ம் ஆண்டு புனித அந்தோனியார் அடக்கம் செய்யப்பட்ட இடத்தை அகழ்ந்து பார்த்தபோது உடல் அழிந்திருந்தது; அவரது நாக்கு மட்டும் அழியாது அப்படியே இருந்ததாம். அவரது பிரசங்கத்தை மீன்களும், கழுதைகளும் கூடக் கேட்டதாம். அனேகர் திருந்தி நல்வழியில் வாழ்ந்தார்களாம்.

18ம் நூற்றாண்டில் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்கக் குருமார்கள் பல துன்பங்களை அனுபவித்தனர். யோசேவ்வாஸ் தம் உயிரைப் பணயம் வைத்து தொண்டாற்றிய காலம், அன்டோனியோ அடிகளார் மலிபன் வீதியில் ஒரு வியாபாரி வேடம் பூண்டு இறைதொண்டாற்றினார். கொச்சிக்கடை அக்காலத்தில் ஒரு மீனவக் கிராமமாகக் காணப்பட்டது. அக்கிராம்வாசிகள் கடலரிப்பால் மிகுந்த கஷ்டங்களுக்குள்ளானார்கள். இவர்கள் துயர்துடைக்க அன்டோனியோ அடிகளார் சிலுவை ஒன்றை வைத்து ஜெபித்து மண்ணரிப்பையும் இல்லாதொழித்தார். மணல் மேடும் உருவாகியது. அவ்விடத்தில் அந்தோனியார் பெயரால் சிறு குடிசை ஆலயமாக உருவாயிற்று. 1806ல் ஆலயம் விரிவாக்கப்பட்டது. 1882ல் கோவையிலிருந்து புனித அந்தோனியாரின் சிறிய சுரூபம் கொண்டுவரப்பட்டது. 1828ல் ஆலய வேலைகள் தொடங்கி 1834ல் நிறைவுற்றது. இவ்வாலயத்தை அபிசேகம் செய்தவர் பேரருட்திரு. கட்டானோ அந்தோனியோ அடிகளார் தான்.

2008 ஆனி 13ம் திகதி கொச்சிக்கடை புனித அந்தோனியாருக்கு 174வது ஆண்டு. அன்று பக்தர்கள் பெருவிழாக் கொண்டாடினர்.

– வயலற் சந்திரசேகரம் –





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

– வயலற் சந்திரசேகரம் –

வாழ்க்கை ஒரு யாத்திரை - அதில்
தோல்வி ஒரு மாத்திரை
சூழ்ச்சிகள் ஒரு மறைதிரை - அதில்
வீழ்ச்சிகள் ஒரு முத்திரை

வாழ்வும் சாவும் இயற்கைதானே - இங்கு
இன்பமும் துன்பமும் இணையுந்தானே?
வரவும் செலவும் கணக்குத்தானே - இதை
ஆணும் பெண்ணும் உணரணும் தானே?

துன்பம் ஒரு சுழல் சக்கரம் - இதில்
இன்பம் ஒரு துளி மந்திரம்
அன்பு உன்னை யாட்கொள்இயந்திரம் - இதில்
அடைபட்டால் உன்னைத் தேடிவரும் துயரம்

அன்பாலே உயிர்கள் இணைவதுண்டு - இங்கு
அன்பில்லை என்றால் சிதைவதுண்டு
இன்பங்கள் கோடி தருவதுண்டு - பின்பு
துன்பங்க்ள் தேடி வதைப்பதுண்டு

மனக்கோட்டை கட்டும் மனிதருண்டு - இங்கே
சினக்கோட்டைத் தாண்டாது அழிவதுண்டு
உருண்டோடும் நாட்கள் மறைவதுண்டு - தினம்
வெருண்டோடும் கௌரவம் சிதைவதுண்டு

கௌரவத்தை மதிக்கும் ஒரு கூட்டமுண்டு - இங்கே
கட்டுக்கடங்கா விதிசெய்யும் மாற்றமுண்டு
கட்டுப்பாட்டை மீறிச்சிலர் நடப்பதுண்டு - இங்கே
மட்டம்தட்டி மனிதனையே அழிப்பதுண்டு



## குறும்(புப்)பா - 5

கண்நாவல் பழம்போல் கறுப்பு
காணும்பல் முத்துப்போல் சிரிப்பு
கல்யாணக் கதைவந்தால் காணிமனை காசுதேடும்
காதலனுக் குளடி செருப்பு

~ மலர் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஏற்பாட்டு ஒழுக்கவியலும், இன்றைய தமிழர் சமூகமும்

அலகு - 2

## நிருபங்களில் வியாபித்து நிற்கும் ஒழுக்க விழுமியங்கள்.

ம. குமுதா (சிறப்புக் கலைமாணி)



### 4. கிறிஸ்தவ வாழ்க்கை நிலைக்கேற்ற அறிவுரை

"திருமறையின் ஆதிகாலத்திலிருந்தே மறைவிளக்கம் பண்ணுதல் வழக்கம்" அந்தவகையில் புனித பவுல் எபிரேயருக்கு எழுதிய திருமுகத்திலும் பல வழிவகைகளும் வாழ்க்கை முறைகளும் குறிப்பிடப்படுகின்றன. "சகோதர அன்பில் நிலைத்திருங்கள்" (எபிரேயர் 13:1) என்றுரைத்தபின் விருந்தினரை உபசரித்தல், சிறைப்பட்டோரைப் பற்றிச் சிந்தித்தலும், துன்பப்படுபவருக்கு ஆறுதல் அளித்தலும் அன்புச் செயல்களாகக் கூறப்படுகின்றன. இல்லற வாழ்வுக்கு அன்பும் அறமும் தருவதாய் உள்ள திருமணத்தை மதித்து வாழவும் பொருளாதார வாழ்வில் போதும் என்ற மனம் கொள்ளவும் வேண்டும் என்றும் நல்லறிவு புகட்டுகின்றார்.

உரோமையர் 12:9ல் மனமுவந்து உடன் பிறந்தாரின் குழுவுக்குரிய அன்புகாட்ட அழைக்கின்றார். தொடர்ந்து வரும் வசனங்களில் ஆவியில் வெப்பமுள்ளவராய் நல் எதிர்நோக்கினால் தொடர்ந்து செபத்தில் ஈடுபடும்படி வலியுறுத்துகின்றார். "முகமலர்ச்சியுடன் கொடுப்பவரே கடவுளின் அன்புக்குரியவர்" (2 கொரி 9:7) எனக்கூறி திருச்சபையின் மக்களுக்குத் தகுந்த அன்பினால் ஒருவர் மேல் ஒருவர் அன்புகொள்ள அழைப்பு விடுக்கின்றார்.

தொடர்ந்தும் ஒருவர் ஒருவருடன் இணங்கி வாழுங்கள், தாழ்ந்தவர்களுடன் சேர்ந்து பழகுங்கள், தண்டனைத் தீர்ப்பிடாதீர்கள் என்பதனூடாக எல்லோரும் சேர்ந்து ஒரு பொதுவான முடிவுக்கு வரும் வகையில் எல்லோருடைய எண்ணங்களும் ஒற்றுமைப்படவேண்டும் எனவும், ஒருவருக்கொருவர் இணங்கிப்போக வேண்டும் எனவும், ஒருவரோடொருவர் ஏக சிந்தனை உள்ளவர்களாய் இருக்க வேண்டும் எனவும், தீமைக்குப் பதில் தீமை செய்யாமல் முடிந்தவரை அனைவருடனும் அன்புடன் பழக வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார். கலாத்தியர் 6:1 வசனம் அதிகாரத்தோடே ஆணவத்தோடே அன்று அன்போடும், சாந்தத்தோடும் திருத்தவேண்டும் என்கிறது. ஏனெனில் சாந்தம் ஆவிக்குரிய செயலாகும் (மத்: 5:23). இன்னும் கலாத்தியர் 6:9ல் நன்மை செய்வதில் சோர்வு ஏற்பட்டாலும் மனம் தளரக்கூடாது எனப்படுகிறது. ஏனெனில் வாழ்க்கை என்பது ஓர் ஓட்டப்பந்தயம். இடையில் ஓட்டத்தை முடித்துக்கொள்ளவோ, உட்கார்ந்து இளைப்பாறவோ கூடாது. இலக்கை நோக்கி முனைந்து ஓடின் அறுவடைக்காலத்தில் தக்க பரிசு கிடைக்கும் (பிலிப்பியர் 3:12-16) என்பது பவுலின் கருத்தாகும்.

புனித பவுல் தீத்துவுக்கு எழுதிய மடலில் குடும்ப அடிப்படையில் அல்லாமல் வயது, பால், வாழ்க்கை நிலை ஆகிய அடிப்படையில் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படும் சிறப்பான செயல் முறையான அறிவுரைகளைக் கூறுகின்றார். வயது முதிர்ந்த ஆண்கள் தம் வயதான காலத்தில் இயற்கையாக வரும் சிரமங்கள், மனத்தளர்ச்சி, ஊக்கமின்மை ஆகியவை குறுக்கிடும் பொழுது மனவுறுதி கொள்ளவேண்டும் எனவும் (தீத்து 2:27) வயது முதிர்ந்த பெண்களும் அடக்கவொடுக்கமாய் இருக்க அறிவுறுத்துகிறார். விவேகம், கற்பு இரண்டும் பெண்பாலார் என்ற முறையில் அவர்களிடத்தில் இருக்கவேண்டியவையாகக் குறிப்பிடுகின்றார். மேலும் பெண்களிடம் இரக்கக் குணம் பெருமளவுக்கு எதிர்பார்க்கப்படுகின்றது. வீட்டு வேலைகளை இவர்கள் செய்தபோதிலும் தன் குடும்பத்தினருடனும் தன் வீட்டு வேலைக்காரர்களுடனும் இரக்கமுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்கிறார்.

இன்னும் கணவர்க்குப் பணியவேண்டும் இல்லையெனில் வெளியுலகம் நற்செய்தியைத் தான் குறைகூறும். இக்குறைச் சொல்லுக்குப் பெண்களின் நடத்தை காரணமாக இருக்கக் கூடாது என்கிறார். இளைஞர்கள் கட்டுப்பாடு உள்ளவர்களாக இருக்கவேண்டும் எனவும், அடிமைகள் தலைவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அனைத்திலும் பணிந்து நடப்பதுடன் தலைவரை எதிர்த்துப் பேசவோ, கையாடல் செய்யவோ கூடாது எனவும், முழு நம்பிக்கைக்குரிய நல்லவர்கள் என்று தம் நடத்தையில் காட்டவேண்டும் எனவும் பவுல் கேட்டு நிற்கின்றார் (தீத்து 2: 9-10).

கிறிஸ்தவ வாழ்வை ஒழுங்குபடுத்தும் நோக்கோடு உரோமையருக்கு எழுதிய நிருபத்தின் 13: 1-7 பகுதியில் மனித அரசு இறைவனுடைய பராமரிப்பின் கொடை, அதிகாரங்கள் எல்லாம் இறைவனால் கொடுக்கப்பட்டவை, எனவே நாட்டின் சட்டங்களுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்று குறிப்பிடுகின்றார். பக்தியும் ஒழுக்கமும் உடையவர்களாய் கலகமில்லா அமைதிவாழ்வு நடாத்துமாறு மக்கள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவி அதன்படி வாழவும், திருச்சபை வளரவும் சரியான சூழ்நிலை வேண்டும். நாட்டில் அமைதி நிலவவேண்டும். எனவே அதிகாரிகளுக்காக வேண்டிக்கொள்ள ஆணையிடுகிறார். 1 தெசலோனிக்கேயர் 4:7ல் "கடவுள் நம்மை ஒழுக்கக் கேட்டிற்கு அல்ல தூய வாழ்வுக்கே அழைத்தார்" எனக் கூறுவதிலிருந்து கடவுள் தந்த அன்பின் அடிப்படையில் அமைந்த கட்டளைகளைப் புறக் கணிப்போர் மனிதரை அல்ல, தம்முடைய தூய ஆவியையே அளிக்கும் கடவுளையே புறக்கணிக்கின்றனர் எனக் கூறுகின்றார். 1 தெசலோனிக்கேயர் 5:12 பொது அறிவுரைப்பகுதியாகும். ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் மனத்தளர்ச்சியுற்றவர்க்கு ஊக்கமும், வலுவற்றோர்க்கு உதவியும் வேண்டுவதுடன் பொறுமை, நன்மை, செபம் என்பவற்றுடன் சோம்பல்தனத்தை அகற்றிவிடும்படி அறிவுரை புகட்டுகின்றார்.

- தொடரும் -

# தனது மரணத்தைக் கனவில் கண்டவர்

ஆபிரகாம் லிங்கன் தமது மரணத்தைக் கனவில் கண்டார். அதைத் தொடர்ந்து நெருங்கிய நண்பரான வார்ட் ஹில் லேமன் என்பவரிடம் தெரிவித்தார். லிங்கன் சொன்னதை லேமன் குறித்து வைத்தார்.



"பத்து நாட்களுக்கு முன் நேரம் கழித்துத் தூங்கப் போனேன். ஒரு கனவு வந்தது. என்னைச் சுற்றிலும் ஒரு மரண அமைதி நிலவியது. பலர் விம்மி அழுவதும் மெதுவாகக் கேட்டது. படுக்கையை விட்டெழுந்து கீழே இறங்கிப் போனேன். ஒவ்வோர் அறையாகச் சென்றேன். யாரும் கண்ணில் படவில்லை. அழுகைச் சப்தம் மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. என்னவென்று புரியாமல் குழம்பியவனாக கிழக்குப் பக்கமுள்ள அறைக்குச் சென்றேன். அங்கு ஒரு மேடையமைத்து ஒரு சடலம் கிடத்தப்பட்டிருந்தது. சுற்றிலும் போர் வீரர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். சடலத்தை வெறித்துப் பார்த்தவாறு பலர் நின்றிருந்தார்கள். இறந்தது யார் என்று ஒரு போர் வீரனைக் கேட்டேன், "ஜனாதிபதி. அவரை ஒருவன் சுட்டுவிட்டான்" என்று பதில் வந்தது"

லேமன் இவ்வாறு எழுதிவைத்த ஐந்தாம் நாள் - ஏப்ரல் 15ம் திகதி லிங்கன் சுட்டுக் கொல்லப்பட்டுவிட்டார். அவரது சடலம் வெள்ளை மாளிகையில் கிழக்குப் பக்கம் உள்ள அறையில் இராஜாங்க மரியாதையுடன் கிடத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சுகமான வாழ்வுக்கு மாதம் ஒரு யோகா

## உட்கட்டாசனம்



1. விரிப்பின் மீது இரண்டு கால்களையும் நேராக வைத்து நிற்கவும்.
2. கால்களை ஓர் அடி இடைவெளியில் வைக்கவும்.
3. கைகளை நெஞ்சுக்கு நேராக நீட்டவும்.
4. மெதுவாக முழங்கால்களை மடக்கி கதிரையில் உட்காருவதைப்போல் இருக்கவும்.
5. பார்வை நேராக இருக்கவேண்டும்.
6. ஆசன நிலையில் இயல்பான சுவாசத்தில் இருக்கவேண்டும்.
7. 10 முதல் 20 வினாடிகள் வரை இருக்கலாம்.
8. பின் இயல்பு நிலைக்கு வந்து ஓய்வு எடுக்கவும்.
9. 3 முறை செய்யலாம்.

### இதனால் ஏற்படும் பலன்கள்

1. மன ஒருமைப்பாடு ஏற்படுகின்றது.
2. விளையாட்டுத்துறை மாணவர்களின் கால்களுக்கு இவ்வாசனம் நல்ல வலிமையைத் தருகின்றது.
3. தொடர்ந்து உட்கார்ந்து வேலை செய்யும்போது கை, கால் நடுக்கம் நரம்புத் தளர்வுகள் மறைகின்றது.
4. கால்களுக்குப் போதியளவு இரத்தம் ஓடி சுறுசுறுப்புப் பெறுகின்றது.
5. தினசரி 5 மைல் நடப்பதால் ஏற்படும் பலன் இவ்வாசனத்தைப் பயில்வதால் கிடைக்கின்றது.

### தீரும் நோய்கள்

1. முட்டுவலி, இடுப்புவலி ஆகியவற்றைப் போக்குகின்றது.
2. தொப்பையைக் குறைக்கின்றது.
3. கால், பாதவலிகள், கணுக்கால் வலிகள் போன்றவை இவ்வாசனத்தைத் தொடர்ந்து செய்தால் மறையும்.
4. வாத நோயைச் சரி செய்கின்றது.
5. உடல் இறுக்கத்தையும், மன இறுக்கத்தையும் போக்குகின்றது.

### குறிப்புகள்

1. கண்களை மூடக்கூடாது.
2. முட்டுவலி உள்ளவர்கள் செய்யக்கூடாது.
3. சுவரில் சாய்ந்து பழகலாம், முடியாதவர்கள் இன்னொருவரின் உதவியை நாடலாம்.

### மாற்றாசனங்கள்

1. பத்மாசனம்.
2. பவனமுத்தாசனம்.
3. உத்தானபாதாசனம்.

மேலதிக ஆலோசனை பெற 0776282908 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

ஆசிரியர்
M. Nesaraj
Yoga Therapist & Counsellar
(India)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தூய ஆவி தரும் நல்வாழ்வை ஏற்புடையதாக்கிக் கொள்வோம்

ஒவ்வொரு மனிதனுக்கும் உணவு உடலுக்கு எவ்வாறு அவசியமோ, அதுபோலவே தூய ஆவியாரும் அவசியமாயிருக்கிறார். ஏனெனில், "நம் உடல் தூய ஆவியார் வாழும் ஆலயம்" இவ்வாவியார் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான செயற்பாடுகளைக் கொடுக்கிறார். இதனையே திருத்தூதர்களின் வாழ்விலும் நாம் காணக்கூடியதாயுள்ளது. இத்தூய ஆவியாரைப் பற்றி தூய பவுல் விசேட விதமாய்த் தம் மடல்களிலே குறிப்பிடுகிறார். மேலும், இத்தூய ஆவியாலே இயேசுக் கிறிஸ்துவை நாம் ஆண்டவர் என அறிக்கையிடுகிறோம்.

இத்தூய ஆவியானவர் ஒரு மனிதனுடைய வாழ்வில் முழுமையாகச் செயற்பட்டால் அவன் பாவத்தோடு ஒரு நாளும் விளையாட மாட்டான். பாவத்தைக் கண்டு விலகி ஓடுவான். ஊனியல்பின் இச்சைகளுக்கும் இடமளிக்க விடமாட்டான். இதனைப் பவுல் மிக அழகாகக் கூறுகிறார். "கடவுளின் ஆவி உங்களில் குடிகொண்டிருந்தால் நீங்கள் ஊனியல்பைக் கொண்டிராமல், ஆவிக்குரிய இயல்பினைக் கொண்டிருப்பீர்கள்" (உரோ 8:9) என்கிறார். மேலும், ஊனியல்பின் இச்சை ஆவிக்கு முரணானது எனவும், ஆவிக்குரிய இயல்பு ஊனியல்பிற்கு முரணானது எனவும் இவை இரண்டும் இவ்வாறு ஒன்றுக்கொன்று முரணாகக் காணப்படுவதாகவும், இதனாலேயே நாம் செய்ய விரும்புவதை நம்மால் செய்யமுடிவதில்லை எனவும் கூறுகிறார்.

ஊனியல்பின் செயல்களாவன: பரத்தமை, கெட்ட நடத்தை, காம வெறி, சிலை வழிபாடு, பில்லி சூனியம், பகைமை, சண்டை, சச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் எனவும் குறிப்பிட்டு இவைகளில் மூழ்கியிருப்பவர்கள் ஆவிக்குத் துரோகம் விளைவிப்பவர்கள் எனக் கூறுகின்றார். மேலும் இவைகளில் இருந்து விடுபட்டு நாம் தூய ஆவிக்குரிய மக்களாய் வாழ விரும்பின் ஆவிக்குரிய செயல்களைச் செய்ய வேண்டும் எனப் பணிக்கின்றார். அவையாவன: அன்பு, மகிழ்ச்சி, பரிவு, அமைதி, பொறுமை, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்பனவாகும். இவைகள் நிறைந்து காணப்படும் இடத்தில் திருச்சட்டத்திற்கு இடமில்லை என்கிறார். மேலும், கிறிஸ்து நம் அனைவரையும் தம் கல்வாரி இரத்தத்தினால் விலை கொடுத்து வாங்கிவிட்டார். நம் ஊனியல்பின் இச்சைகளையும், செயல்களையும் தம் சிலுவையில் அறைந்துவிட்டார். எனவே, நாம் எப்போதும் ஆவிக்குரிய வாழ்வையே வாழ வேண்டும். ஊனியல்பின் இச்சைக்குட்பட்டு வாழ்வோருக்கு வருவது சாவே. ஆனால், ஆவிக்குரியவற்றின் வழி வாழ்வோருக்கு வருவது வாழ்வும், அமைதியுமாகும். எனவே ஆவிக்குரிய வாழ்வினை நாம் எப்போதும் வாழப் பழகிக்கொள்ள வேண்டும். பாவத்தினால் நம் உடல் செத்தாலும் கிறிஸ்து நம்முள் இருந்தால், நாம் கடவுளுக்கு ஏற்புடையவர்கள் ஆக்கப்படுவோம். இதன் பயனாய்த் தூய ஆவியாரும் நம்முள் குடிகொள்வார். கிறிஸ்து இயேசுவை உயிர் பெறச் செய்த கடவுள், நம்முள் குடிகொண்டிருக்கும் தம்முடைய ஆவியால் சாவிற்குரிய நம் உடல்களையும் உயிர்த்தெழச் செய்வார்.

இத்தகைய ஆவிக்குரிய இயல்பில் வாழும் நாம் ஒருபோதும் வீண்பெருமை கொள்ளாமலும், ஒருவருக்கொருவர் எரிச்சல் ஊட்டும்படி நடக்காமலும், ஒருவர் மீது ஒருவர் பொறாமைப்படாமலும் வாழக் கற்றுக் கொள்ளவேண்டும். இவ்வாறு வாழும்போது கடவுளின் உரிமைப் பேற்றினைப் பெற்று அவரை "அப்பா தந்தாய்" என அழைக்கும் உரிமையினையும் பெறுவோம். இவ்வாறு நாம் அழைக்கும்போது தூய ஆவியாரும் நம் உள்ளத்தோடு சேர்ந்து நாம் கடவுளின் பிள்ளை என்பதற்குச் சான்று பகர்கிறார். கிறிஸ்துவின் பங்காளிகளாகிய நாம் அவருடைய துன்பங்களிலும் பங்கெடுத்து, அவருடைய மாட்சியிலும் பங்கு பெறுவோம். எனவே இத்தகைய பேறுகளை நாம் பெற ஆவிக்குரிய இயல்புகளை நம் வாழ்வில் கடைப்பிடித்து ஊனியல்பின் இச்சைகளைக் களைந்து ஆவி தரும் நல்வாழ்வினை நமதாக்கிக் கொண்டு கடவுளின் சாட்சிகளாய் வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

ஆழியோன்

அண்மையில் நடைபெற்ற கிழக்கு மாகாணசபையின் தேர்தலானது ஜனநாயகப் பணியை பலப்படுத்தியதோ இல்லையோ ஆனால் முரண்பாடுகளைத் தோற்றுவித்துவிட்டது என்பது தான் உண்மை. இந்த நேரத்தில் தென்கச்சி சுவாமி நாதன் அவர்கள் தனது தேர்தல் அனுபவம் ஒன்றை சஞ்சிகை ஒன்றில் எழுதியுள்ளார். அதனை அப்படியே இலக்கிய மஞ்சரியில் தருகின்றோம்.

"உங்கள் ஓட்டு அணில் சின்னத்திற்கே!" "ரம்பம் எங்கள் சின்னம்!" இவ்வாறு எங்கள் கிராமத்தில் எங்கு பார்த்தாலும் முழக்கம். அது 1970. ஊராட்சி மன்றத் தேர்தல் நடைபெற்ற சமயம். எங்களூர்ப் பெரியவர்களுக்கு ஒரு கவலை. காலங்காலமாகப் போட்டியின்றி ஒற்றுமையாகச் சிந்தித்து தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வழக்க முள்ள ஓர் ஊர், அங்கு முதற்தடவையாகப் போட்டி ஏற்பட்டுவிட்டதே என்ற கவலை. போட்டியிடுகின்ற வர்கள் யார்? நானும் இளங்கோவன் என்ற இளைஞரும். இளங்கோவன் யார்? எனக்கு மச்சான் முறை.

பிரபல திரைப்படப் பாடலாசிரியர் அ.மருத காசியின் மூத்த மகன். எங்கள் மாமா மருதகாசிக்கு தர்ம சங்கடம். மகன் ஒரு பக்கம், மருமகன் ஒருபக்கம். யாருக்கென்று ஓட்டுக்கேட்பது. அவர் கடைசியாக ஒரு காரியம் செய்தார். எங்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு ஒவ்வொரு வீடாகச் சென்றார்.

"இதோ பாருங்கள்! இவர்கள் இருவருமே என் கண்கள். ஒருவர் எனக்கு மகன், இன்னொருவர் மருமகன். இவர்கள் இருவரில் யார் வென்றாலும் அது என் வெற்றியே!" என்றார். பெரியவரே அப்படிக் கூறிய பின்னர் நாங்கள் என்ன செய்ய முடியும்.

நானும் இளங்கோவனும் சேர்ந்தே ஒவ்வொரு வீடாகச் சென்றோம். நாங்கள் இரண்டு பேரும் தேர்தலில் நிற்கின்றோம். உங்களுக்கு யாருக்கு ஓட்டளிக்க வேண்டும் என்று தோன்றுகிறதோ அவர்களுக்கு அளியுங்கள் என்றோம். எங்கள் ஓட்டு சேகரிக்கும் முறை எல்லோருக்கும் வியப்பைக் கொடுத்தது. 'இவர்கள் சண்டை போட்டுக்கொள் வார்கள் என்று எதிர்பார்த்தால் இப்படிக் கை கோர்த்துக்கொண்டு வருகின்றார்களே' என்றமாதிரி ஆச்சரியமாய் எங்களைப் பாத்தார்கள். ஒரு வழியாக வாக்குப் பதிவு முடிந்தது. உள்ளூர்ப் பள்ளியில் வாக்குகளை எண்ணினார்கள். அணில் சின்னத் திற்கு அதிக வாக்குகள் கிடைத்திருப்பதாக அறிவித்தார்கள். அது எனக்கு ஒதுக்கப்பட்ட சின்னம். மாமா மருதகாசி உடனே ஒரு மாலையை இளங்கோவிடம் கொடுத்து என் கழுத்தில் அணிவிக்கச் சொன்னார். நான் மாமாவை வணங்கி ஆசீர்வாதம் பெற்றேன்.

"என் மாப்பிள்ளை வென்றதில் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி" என்று ஊரார் முன்னிலையில் அறிவித்தார். மாமா இப்படியெல்லாம் நடந்து கொண்டதன் அர்த்தமும் எனக்கு அப்போது சரியாக விளங்கவில்லை. ஒரு சாதாரண ஊராட்சி மன்றத் தேர்தல் ஊருக்குள் பகையை உண்டுபண்ணிவிடக் கூடாது என்பதில் ஊர்ப்பெரியவர்கள் எவ்வளவு ஜாக்கிரதையாகச் செயற்பட்டிருக்கிறார்கள் என்பதனை இப்போது புரிந்துகொள்கின்றேன்.

வெற்றிபெற்ற என்னை மாலையும் கழுத்துமாய்த் தெருக்களின் வழியே அழைத்துச் சென்றார்கள். வீட்டுக்கு வீடு பெண்கள் திலகமிட்டு என்னை வாழ்த்தினார்கள். அப்போது வயதான ஒரு அம்மையார் வாழ்த்துவது என் காதில் விழுந்தது. "என்னமோப்பா, நீங்க இரண்டு பேரும் சண்டை போட்டுக்கொள்ளாம ஒத்துமையா இருந்தா அதுவே எங்களுக்குப் போதும்!"

'அரசியல்வாதிகள் சண்டை போட்டுக் கொள்ளாமல் இருந்தால் மக்கள் நிம்மதியாக இருப்பார்கள்' என்ற அரிய விடயத்தை அந்தப் படிக்காத பாமரத்தாய் எவ்வளவு சர்வசாதாரணமாய்ச் சொல்லிவிட்டார்கள்.

இன்றைய சூழ்நிலையில் இது மிகவும் அவசியமல்லவா....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட் - திருமலை மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் வரலாறு காணாத வெள்ளிவிழா நிகழ்வுகள்

**25** வருடங்கள் ஆயர்த்துவப் பணியைப் பூர்த்தி செய்யும் மனித நேயப் பண்பாளர் மட் - திருமலை ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் வெள்ளிவிழா ஏற்பாடுகள் கடந்த ஒருமாதகாலமாக பரபரப்பாக மேற்கொள்ளப்பட்டன.



மட்டக்களப்பு புனித மரியாள் இணைப்பேராலய முன்புறம் 100 அடி அகலமான மேடை அமைக்கப்பட்டது. ஐந்து பிரிவுகளாக அமைந்த இம்மேடையில் மத்தியில் உள்ள மூன்று பகுதிகளும் கலை நிகழ்ச்சிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தன. இடப்புற மேடையில் அறிவிப்பாளர் களும் வலப்புற மேடையில் பேச்சுகளும் இடம்பெற்றன. தேவாலயத்தின் முன்புறம் பிரமாண்டமான கொட்டகை அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் ஆயர் கள், கத்தோலிக்கப் பிரமுகர் கள், அரசியல் தலைவர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டி ருந்தனர். ஆயருடன் இவர்கள் அனைவரும், மாலை மரியா தைகளுடன் நாதஸ்வர மேள வாத்தியம் முழங்க ஆயர் இல்லத்திலிருந்து அழைத்து வரப்பட்டனர். இந்த ஊர்வ லம் கொட்டகைக்குள் நுழைந் ததும் கொட்டகையில் இருந்த அனைவரும் எழுந்து நின்று மரியாதை செலுத்தினர்.

சுமார் ஐயாயிரம் பேர் வரை நிறைந்திருந்த இக்கொட் டகையில் அபூர்வமான நிசப்தம் நிலவியது. மக்கள் அனைவரும் மெய் சிலிர்த்த நிலையில் இருந்தனர். முதல் இருவரிசை ஆசனங்கள் (சுமார் ஐம்பது) சமயப் பிரமுகர்களுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. அடுத்த வரிசை ஆசனங்கள் பாரா ளுமன்ற உறுப்பினர்களுக்கும், அடுத்த இருவரிசை ஆசனங் கள் அரச உத்தியோ கத்தர்க ளுக்கும் ஒதுக்கப்பட்டி ருந்தன.



சரியாகப் பி.ப. 4.00 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்ப மாயின. முதல் நிகழ்ச்சியாக ஆயரும் ஏனைய பிரமுகர்களும் மங்கல விளக்கேற்றினர். அதைத் தொடர்ந்து இறையாசீர் வேண்டிப் பிரார்த்தனை இடம்பெற்றது. மேடையின் மத்தியில் இருந்த வர்கள் பிரார்த்தனைப் பாடல்களை இசைத்தனர்.

அதனைத் தொடர்ந்து வரவேற்பு நடனம் சுவாமி விபுலா னந்தா இசைநடனக் கல்லூரி

16ம் பக்கம் பார்க்க..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேனாடு கண்ட ம
# புதிய துணை ஆயரின் து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும் திருவிழா
# ருப்பொழிவு நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



மாணவிகளால் ஆடப்பட்டது. சுமார் ஐம்பது பேர் கலந்து கொண்ட இந்நடனம் ஒரு பிசிறு இல்லாமல் மிகப் பிரமாதமாக அமைந்தது. அடுத்து வரவேற்புரை, அருட்தந்தை பொன்னையா ஜோசப் அவர்களினால் ஆங்கிலத்திலும், தமிழிலும் நிகழ்த்தப்பட்டது. அரிய கருத்துகள் நிறைந்த அற்புதமான உரையாக அது அமைந்தது. இதன்பின் பாராட்டுரைகளும், கலைநிகழ்ச்சிகளும் கலந்து இடம்பெற்றன. அதற்கு முன்னதான வெள்ளி விழா மலர் வெளியீடு, அருள்தந்தை ஏ.நவரத்தினம் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. (மலர் ஆசிரியரும் இவரே) மலர் வெளியீட்டுரையை அழகாகவும் மிகச் சுருக்கமாகவும் அவர் நிகழ்த்தினார்.

வெள்ளிவிழா சிறப்புமலர் மிகச்சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருந்தது. நான்கு பகுதிகளாக இதில் ஆக்கங்கள் இடம்பெற்றன. அவை (அ) ஆசிச் செய்திகள் (ஆ) ஆயரின் பொதுப் பணிகள் (ஆணைக்குழுக்கள் செயற்பாடுகள்) (இ) ஆயரின் சிறப்புப் பணிகள் (ஈ) புகைப்பட ஊர்வலம். ஆயரின் இளமைக் காலம் முதல் இற்றை வரையிலான புகைப்படங்கள் கலைத்துவத்துடன் தொகுக்கப்பட்டிருந்தன. சிறப்பு மலரின் தொகுப்பாசிரியர் அருள்தந்தை நவரெத்தினம் (நவாஜி) மிகுந்த பிரயாசை எடுத்துக்கொண்டு இச்சிறப்பு மலரை வடிவமைத்திருந்தார். (இவர் பிரபல எழுத்தாளர் வ.அ.இராசரத்தினத்தின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது)

பாராட்டுரையை வழங்கிய அனைவரும் பிரமுகர்கள். யாழ் மறைமாவட்ட ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தர நாயகம் (இவரும், நமது ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையும் பாடசாலை நண்பர்களாம்) சுவாமி அஜரத்மானந்தா (மட். ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் தலைவர்) அதி.வண. கலாநிதி. வியான்னி பெர்ணாண்டோ, மௌலவி எம்.எச்.எம்.புகாரி அவர்களின் சார்பில் மற்றொரு மௌலவி, கிழக்குமாகாண முதலமைச்சர் கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன், கௌரவ அமைச்சர் மில்றோய் பெர்ணாண்டோ, வடக்கு கிழக்கு மெதடிஸ்த சபைத் தலைவர் வண எஸ்.எஸ்.ஞானராசா முதலிய பலர் பாராட்டுகளை வழங்கினர்.

பாராட்டுரைகள் ஒவ்வொன்றும் சுருக்கமாகவும் ஆயரின் பல்வேறு அருமை பெருமைகளை பல்வேறு கோணங்களில் வெளிப்படுத்துவனவாகவும் அமைந்திருந்தன. இந்த உரைகள் ஒவ்வொன்றும் விதந்து கூறப்படவேண்டியவை. ஒவ்வொரு உரையும் ஐந்து நிமிடங்களுக்குள் அடங்கியிருந்தன. ஆனாலும் ரத்தினச் சுருக்கமாக அமைந்திருந்தன.

ஆயரின் நன்றியுரை, நெஞ்சைத் தொடுவதாக கண் கலங்க வைப்பதாக அமைந்திருந்தது. கடந்த 25 ஆண்டு காலப் பணிகள், சுனாமி அனர்த்தங்கள், இனக் கலவர அனர்த்தங்கள் ஊடாக அவர் கடந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த பாதை அனைத்தும் எம் நெஞ்சில் நிழலாடின.

இவற்றுக்கு மத்தியில் மறைமாவட்டத் தோத்திரப் பாடல் நூல் வெளியீடு, லெயிற்றி ஆணைக் குழு நூல் வெளியீடு முதலியனவும் இடம்பெற்றன. இவற்றை முறையே அருள்தந்தை நோயல் இம்மானுவேல், அருள்தந்தை ஜே.டன்ஸ்ரன் ஆகியோர் வெளியிட்டு வைத்தனர். புலவர் அரிநாயகத்தின் பாராட்டுரை அழகு தமிழில் நெஞ்சைத் தொடுவதாக அமைந்திருந்தது.

இவ்விழாவில் இடம்பெற்ற ஒவ்வொரு கலைநிகழ்ச்சியும் புதுமையாகவும் சிறப்பாகவும் அமைந்திருந்தன. சுவாமி விபுலானந்தர் இசைநடனக் கல்லூரி வழங்கிய வரவேற்பு நடனம் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டோம். அதற்கு ஈடாக மட்-திருமலை சமூகத் தொடர்புகள் நிலையம் வழங்கிய நடனம் அமைந்திருந்தது. இதன் பாடலும் இசையும் நெஞ்சைத் தொட்டன.





அம்பாறை மாவட்டத்திலிருந்து வந்திருந்த நடனம் கண்டி ராசன் விக்கிரமராசசிங்கனை முன்னிலைப்படுத்தி நிகழ்ந்தது. புதுமை நிறைந்திருந்தது. பிரசித்தி பெற்ற திருமறைக் கலாமன்றம் வழங்கிய நடன நிகழ்ச்சி, கண்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடனம், தில்லானா பங்ரா நடனம் முதலியவற்றை இணைத்து மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. புதுமையான கற்பனை.

கல்முனை கார்மல் பாத்திமா தேசிய பாடசாலை வழங்கிய நடனமும் புதுமையாக இருந்தது. ஏழை, நொண்டி, நோயாளி, கைகள் இழந்தவன் முதலியோரை முன்னிறுத்தி சமூக அவலங்களின் துயர் துடைக்க வேண்டிய நமது கடமையை இந்நடனம் வெளிப்படுத்தியது.


இவ்வாறே புனித ஜோசப் கல்லூரி வழங்கிய நடன நிகழ்ச்சியும் சிறப்பாக அமைந்திருந்தது. திருமலை புனித மரியாள் கல்லூரி வழங்கிய Action Song நடனமும் சிறப்பானதே மட். புனித சிசிலியாஸ் மகளிர் கல்லூரி வழங்கிய நடனமும், மட்/ தன்னாமுனை மகாவித்தியாலயம் வழங்கிய நடனமும் மறக்கமுடியாதவை.



இவ்வெள்ளிவிழா ஏற்பாடுகளில் முக்கிய பங்கு வகித்த அருள்தந்தை ஸ்ரீதரன் சில்வஸ்ரர் நன்றியுரை வழங்கினார். என்றுமே மறக்கமுடியாதபடி நெஞ்சினில் ஆழப் பதிந்தது இவ்விழாவின் "மகோன்னதம்"

– அன்புமணி –

# கடுகுக் கதை 5 ஆறுதல் பெருமூச்சு



மகனுக்கு நேர்முகப் பரீட்சைக்கான புதிய உடுப்புச் சோடியொன்றைத் தைப்பதற்காக ஆறுமுகத்தார் தையல் கடையொன்றில் துணிகளை வாங்கிக் கொடுத்திருந்தார். ஆனால் கடை ஒரு வாரமாகப் பூட்டிக் கிடந்தது. என்ன செய்வதென்றே ஆறுமுகத்தாருக்குத் தெரியவில்லை. கடைசியில் புடவைக் கடையில் 'ரெடிமேட்'டாக உடுப்பை வாங்கி நேர்முகப் பரீட்சையை ஒப்பேத்தினார்கள்.

அடுத்தநாள் ஆறுமுகத்தாரின் மகன் பரபரப்புடன் வந்து சொன்னான் "அப்பு! நம்மட டெயிலரின் படம் போஸ்டரில போட்டிருக்கு.."

"அட! எப்படிச் செத்துப்போனவன்?"

"சாகல அப்பு.. எலக்சனில நிக்கிறார்"

"அ! அப்படியா.....?" என்று ஆறுமுகத்தார் ஆறுதல் பெருமூச்சு விட்டார்.

– பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






*இம்முறை 'தொண்டனின் சில நிமிடங்களுக்காக' கிழக்கின் பிரபல்யமான கையடக்கத் தொலைபேசி தொழில்நுட்பவியலாளரான திரு.மோ. மொறிஸ் அனஸ்டன் அவர்களைச் சந்தித்தோம். மிகவும் கெட்டித்தனமான கையடக்கத் தொலைபேசியியலாளராக திரு. மொறிஸ் அவர்கள் தனது வாழ்க்கையை 'அ' விலிருந்து ஆரம்பித்தவர். இவரை எளிதில் கண்டுபிடிப்பது கஷ்டம். எனினும் தொண்டனுக்காகக் காத்திருந்து அவரைச் சந்தித்தோம். ஏராளமான வாடிக்கையாளர்களை இலாவகமாக சமாளித்துக் கொண்டே பேட்டியையும் தந்தார்.*

**திரு.மொறிஸ் அவர்களே உங்கள் இளைமைக்காலம் பற்றிச் சொல்ல முடியுமா?**

நான் வாழைச்சேனையில் உள்ள தியாவட்டுவான் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவன். தியாவட்டுவான் சிங்களப் பாடசாலையில் 4ம் வகுப்புவரை கல்வி கற்றேன். 1985ம் ஆண்டு இடம்பெற்ற தமிழ்-முஸ்லிம் இனக் கலவரத்தை அடுத்து மட்டக்களப்பிற்கு இடம்பெயர வேண்டியேற்பட்டது. பின்னர் ஐந்தாம் வகுப்புத் தொடக்கம் மட்/புனித மிக்கேல் கல்லூரியில் கல்வி கற்றேன்.

**இவ்வாறான தொழில்நுட்பத் துறையில் எவ்வாறு ஆர்வமும் ஈடுபாடும் ஏற்பட்டது?**

அது மிகவும் சுவாரஷ்யமான கதை. எனது தகப்பனார் எலக்ரோனிக் உபகரணங்களை சிறப்பாகத் திருத்துவார். அவர் வேலை செய்யும்போது உன்னிப்பாகக் கவனிப்பேன். 5ம் வகுப்புப் படிக்கும்போது மணிக்கூடுகளைத் திருத்தத் தொடங்கிவிட்டேன். வீட்டில் ஏசுவார்கள் என்ற பயத்தில் இரகசியமாகவே மணிக்கூடு திருத்துவேன். அதற்கு அப்பாவின் உபகரணங்களைப் பாவிப்பேன்.

**எவ்வாறு அது சாத்தியமானது?**

அது எனக்கு இன்னும் ஆச்சரியமான விடயம்தான். மணிக்கூட்டைப் பற்றி எவ்விதமான நூலறிவும் எனக்குக் கிடையாது. ஆனால், தேவ மாதாவிடம் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்வேன். அதாவது மணிக்கூடு சரியாக வேலை செய்யுமானால் மாதாவிற்கு மெழுவர்த்தி கொழுத்துவதென்று. அதன்பின் மணிக்கூட்டைத் தொட்டால் அது சரியாகத் திருத்தப்பட்டுவிடும். பின்னர் மாதாவிற்கு மெழுகுதிரி கொழுத்திவிடுவேன். ஆகக் கூடியது மூன்று மெழுகுதிரிகள்தான்.

**அதன் பின்னர் எவ்வாறு தொழில்நுட்பத் துறையில் வளர்ச்சியடைந்தீர்கள்?**

7ம் வகுப்புப் படிக்கும்போது வானொலியைப் பழுதுபார்க்கத் தொடங்கிவிட்டேன். 9ம் வகுப்புப் படிக்கும்போது தொலைக்காட்சிப் பெட்டிகளைத் திருத்தத் தொடங்கிவிட்டேன். அக்காலகட்டத்தில் தான் தொலைக்காட்சிப் பெட்டிகள் இலங்கையில் அறிமுகமாயின. முதன்முதலில் தொலைக்காட்சிப் பெட்டியைப் பார்த்தவுடன் தடவித்தடவிப் பார்த்துத் தான் அதனுடைய மின் ஆளியைக் (Power Switch) கண்டுபிடித்தேன். பின்னர் படிப்படியாகத் திருத்தங்கள் செய்யத் தொடங்கிவிட்டேன். எல்லாம் தேவதாயாரின் அருள் தான்.

**பின்னர்...**

17 வயதாகும்போது 'வீடியோக் கமரா' திருத்தத் தொடங்கிவிட்டேன். நல்ல வருமானம் தரும் தொழிலாக அது இருந்தது. பின்னர் கையடக்கத் தொலைபேசி இலங்கையில் பாவனையில் வந்தது;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அதனைப் பற்றியறிய ஆர்வம் வந்தது. தமிழ்நாட்டின் ஒரு கல்வி நிறுவனத்தில் இருந்து கையடக்கத் தொலைபேசிகள் தொடர்பான பாடநெறிக் குறிப்புகளைப் பெற்று அவற்றைப் படித்துப் பரீட்சைகள் எழுதி சித்தியடைந்தேன். அக்காலகட்டத்தில் 'கட்டாரில்' கையடக்கத் தொலைபேசிகள் தொழில்நுட்பவியலாளராகப் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கு பெரும் பிரபல்யம் கிடைத்தது. என்னை 'அனிஸ்' என்று தான் அழைப்பார்கள். நான் வேலைசெய்த நிறுவனம் என்னை மாதமிருமுறை தாய்லாந்திற்கு அனுப்பி அங்கு பிரபல்யமான நிறுவனமொன்றில் கையடக்கத் தொலைபேசி தொடர்பான பயிற்சிகளையளித்தனர். ஆனால் அதற்கான செலவுகளை எனது சம்பளத்தில் தான் பிடித்துக்கொண்டனர். என்றாலும் பொறுத்துக் கொண்டு கற்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டேன். இரவு பத்துமணி தொடக்கம் அதிகாலைவரை தனிப்பட்ட முறையில் வேலை செய்து இரண்டு மணித்தியாலங்கள் மட்டுமே உறங்கி வீட்டிற்குப் பணம் அனுப்புவேன். அதன்பின்னர் 2004ம் ஆண்டு அந்த நாட்டிலேயே கடை ஒன்றை வைத்துத் தொழில் செய்தேன். எனது அனுசரணை யாளருக்கு மாதமொன்றுக்கு சுமார் இலங்கை ரூபாய் ஓர் இலட்சத்துப் பத்தாயிரம் வரையில் செலுத்த வேண்டியிருந்தது. என்றாலும் அவற்றை ஈடுசெய்யக் கூடியதாய் இருந்தது.

**நாடு திரும்பிய பின் என்ன செய்தீர்கள்?**

எனது வீட்டில் வைத்தே தற்போது வேலை களைச் செய்து வருகின்றேன்.

**உங்களை இத்துறையில் இவ்வளவு துரம் கொண்டுவர பின்புலமாக இருந்தது என்ன?**

எனது இலட்சிய வெறி என்றுதான் சொல்லவேண்டும். ஆரம்பத்தில் வறுமையின் அடித்தளத்திலிருந்து படிப்படியாக முன்னேற முயன்றேன். அதன்படியே நடக்க இறைவன் அருள் புரிந்தார். இதைவிட காலஞ்சென்ற எனது துணை வியார் என்னுடைய முன்னேற்றத்தின் பெரும் பங்காளியாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**இந்தக் கையடக்கத் தொலைபேசியின் தொழில்நுட்ப அறிவை ஏனையவர்கட்கு கற்பிக்கும் நோக்கம் உள்ளதா?**

தற்போதைக்கு இல்லை. எனக்கு இரண்டு மகன்மார்கள் உள்ளனர். அவர்கள் வளர்ந்து தங்களை ஒரு நிலைக்குக் கொண்டுவந்த பின்னர் அது பற்றி யோசிக்கலாம்.

**உங்களால் மறக்க முடியாத சந்தர்ப்பங்கள் ஏதும் உண்டா?**

ஆம்! உண்டு. நான் மட்/ புனித மிக்கேல் கல்லூரியில் படிக்குபோது வெபர் அடிகளார் மாடியில் தொலைக்காட்சியில் படங்கள் காட்டுவதுண்டு. நான் கதிரையிலிருந்து படம் பார்த்துக்கொண்டிருக்கும் போது பெரிய வகுப்பு மாணவனொருவன் என்னை உதைத்து கீழே இருந்து பார்க்கும்படி கூறினான். அன்று என் மனதில் ஒரு வைராக்கியம் தோன்றியது. அந்தத் தொலைக்காட்சி பழுதடைந்தால் நான்தான் திருத்திக் கொடுக்கவேண்டும் என்று. அதேபோன்று 10ம் வகுப்புப் படிக்கும்போது வெபர் அடிகளார் என்னைக் கூப்பிட்டு தொலைக்காட்சிப் பெட்டியையும் 'டெக்கை'யும் திருத்தித் தரச் சொன்னார். அவ்வாறே செய்துகொடுத்தேன்.

**உங்கள் வாழ்க்கை அனுபவத்திலிருந்து நீங்கள் எங்கள் வாசகர்களுக்குச் சொல்வது என்ன?**

மற்றவர்களை அன்பு செய்யவேண்டும். அதேபோன்று பரஸ்பர நம்பிக்கையும் வைக்க வேண்டும். ஓர் இலட்சியத்துடன் இடைவிடாது உண்மையுடன் உழைத்தால் வாழ்வில் முன்னேறி இலட்சியத்தை அடையலாம்.

*இச்சந்திப்பு மட்டக்களப்பு ஊறணியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்றது. ஈற்றில் அவரது ஒத்துழைப்புக்கு நன்றிகூறி தொண்டனின் சார்பில் விடை பெற்றுக்கொண்டோம்.*

- ஆதியோன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக நுண்கலைகள்



தமிழக நுண்கலைகள் பற்றி அருட்திரு V.M. ஞானப்பிரகாசம் (யே.ச) M.A, Ph.D அவர்களும் K.C. கமலையா அவர்களும் எழுதியுள்ளார்கள். இவர்கள் எழுதிய நூல் 1978ம் ஆண்டு வெளிவந்தது. இந்த நூலின் தலைப்புகள் பலவாகும். கவிதை, தமிழிசை தந்த பெருவளம் (கு. தண்டாயுத பாணிப்பிள்ளை) தமிழ் நாடகக் கலை Mrs. சக்திப்பெருமாள், கட்டிடக்கலை நடனகாசி நாதன், தமிழசைச் செப்புத் திருமேனி K.C கமலையா, Painting in Tamil Nadu J. அன்புராஜ் SJ போன்ற பல விடயங்கள் தமிழக நுண்கலைகள் பற்றிய நூலில் வரையப்பட்டுள்ளன. இவற்றை மேற்கோள் காட்டுகின்றேன். 1985ம் ஆண்டில் இந்நூல் வெளிவந்தது. 1200 பிரதிகள் அச்சடிக்கப்பட்டன. சென்னை-1 பாரதி நிலையம் இதைப் பிரசுரித்துள்ளது. எல்லா நுண்கலைகளுமே "போலச் செய்தல்" என்ற அடிப்படையில் தோன்றியவை எனக் கூறுகின்றார் அரிஸ்ரோட்டில். நாடகக் கலையும் அவ்வாறே என்பது அவரது கூற்று.

தமிழ் நாட்டில் புதிய கற்காலம் முதல் கட்டிடக்கலை ஆரம்பமாகிவிட்டது. அக்காலத்தில் தொடங்கிய கட்டிடக்கலை அமைப்புமுறை சங்க காலத்தில் வளர்ச்சி பெற்று கட்டிட இயல் நூல்களையும் வல்லுனர்களையும் கொண்டிருந்தது. கட்டிடக்கலை, பல்லவர், பாண்டியர் காலங்களின் குடவரைக் கோவில்கள், ஒற்றைக் கற்கோவில்கள், கட்டிடக் கலைகள், கட்டிடக் கோயில்கள், சோழர் காலத்துக் கட்டிடக் கலைகள், விஜயநகர கால கட்டிடக் கலையை ஒட்டி எழுந்த கோயில்கள் ஆகியவையெல்லாம் நம் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டு ஓவியங்கள் 2000 ஆண்டுகளுக்கு முன்பே ஓவியம் வகித்த உயர்நிலையைக் குறிப்பிடுகின்றது. மணிமேகலையில் ஓர் இயற்கைக் காட்சி ஓவியத்திற்கு ஒப்பிட்டுக் காட்டப்படுகின்றது. மன்னர்கள் அரண்மனைகளையும், அரசியர் விடுதிகளையும் ஓவியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஓவியங்களைப் பற்றிய இலக்கிய மேற்கோள்கள் பல கட்டுரையில் இடம்பெறுகின்றன. சித்தானைவாசலுக்கு அழகு தரும் ஜைன ஓவியங்கள் பக்தர்கள் மனதைப் பறிக்கும் தஞ்சைப் பெரிய கோவில்கள் உள்ளன.

கலையும் வாழ்வும் ஒன்று என V.M ஞானப்பிரகாசம் கூறுகின்றார். மேலும் அவர் கூறுகின்றார், கலைக்கும் சமயத்திற்கும் ஒற்றுமை உண்டு; வேற்றுமையும் உண்டு. இரண்டும் மனித அறிவின் எல்லையைக் கடந்தவை என்கிறார். அவரது ஒழுக்கக் கண் கொண்டு பார்ப்பின் சில கலைப்படைப்புகள் எடுத்துக்காட்டு: ஒரு பூவைப் பற்றிய ஓவியம். ஒரு கவிதை ஒழுக்கத்தைத் தொடாமலேயே அமையலாம். ஆயின் ஒழுக்கத்தைத் தொடாத, ஒழுக்கத்தைப் பற்றிக் கவலைப்படாத மதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவே முடியாது என்பது ஞானப்பரகாசம் கூற்று.


எனவே வாழ்வும் கலையும் ஒன்றேயாகும். கட்டுப்பாடற்ற புதுக் கவிதைகள் France நாட்டில் உருவாகின. உதாரணமாக கவிதை வானத்தில் கட்டற்ற நிலையில் சுதந்திரப் பறவைகளாகச் சுற்றிவருகின்றன. புதுக்கவிதைகள் வாழும் குரல்கள். இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் இக்கருத்துகள் வளம்பெற்றன.

வாழ்வே கலை என்பதற்கு மேலும் உதாரணங்கள் தேவையா என்ற கேள்வி எழுகின்றது. கலையும் பண்பாடுகளும் அந்தந்த மாநிலங்களில் வாழும் மக்களும் ஒரே இனத்த வர்களல்லர், ஒரே சாதியினரல்லர். ஆனால் இவை இவர்களின் கலைகளாகும்.

பண்பாடுகளும் அந்தந்த மாநிலங்களில் வாழும் மக்களின் அறிவு நிலை, சூழ்நிலைகளுக்கேற்ப நீர் வளம் நில வளத்திற்கேற்ப வேறுபடுகின்றன. இதனைத் தொல்காப்பியர் மிக அழகாக விபரிக்கின்றார். "நிலம் பொழுதிரெண்டின் இயல்பென மொழிப" எனக் குறிப்பிடுகின்றார். வேத நூல்களில் வேத மொழிகள் இசையைப் பற்றிக் கூறுகின்றன (V.M ஞானப்பிரகாசம்) சென்னைப் பல்கலைக் கழகத்தின் இசைப் பேராசிரியர் சாம்பமூர்த்தி ஐயர் அவர்கள் சாம கானம் "கரஹரப்பிரியா" ரரகத்தைப் பெரிதும் ஒத்திருக்கிறது. (அவரது தென்னிந்திய இசை நூல் 4வது புத்தகத்தில் காணலாம்) என்று கூறுகின்றார்.

"நல்ல சாரீரத்தோடும், இசை ஞானத்தோடும் வாத்தியங்கள் இன்றியும் சாம கானம் செய்யும்போது அதில் சட்ஜக்கிரமத்தின் ஸ்வரங்கள் அமைந் திருப்பதைத் தெளிவாக நான் காண்கிறேன்" என்றார்.

இவ்வாறு கலையும் வாழ்வும் ஒன்றெனக் கண்டு தெளியலாம். இந்தியக் கலை அம்சங்களைப் பற்றிப் பேசும் பொழுது வட இந்திய "ஆக்ராவில்" உள்ள தாஜ்மகாலைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. உலக ஏழு அதிசயங்களில் ஒன்று என அது வர்ணிக்கப்படுகிறது. (இது கேள்விக் குறி) சக்கரவர்த்தி சாஜஹான் தன் அன்பு மனைவிக்குக் கட்டிய கல்லறையே தாஜ்மஹால் ஆகும். 1631ம் ஆண்டு மும்தாஜ்மஹால் என்ற அந்தப் பெண்மணியின் பெயரில் அது அமைந்துள்ளது. 1658ம் ஆண்டு சாஜஹானும் அதே இடத்தில் புதைக்கப்பட்டான். இந்த உலகப் பிரசித்தி பெற்ற மஹாலைக் கட்டிய சிற்பி உற்சாட் ரிசாட் ஆவார். இவர் பேர்சிய அல்லது துருக்கிய நாட்டைச் சார்ந்தவர் எனக் கூறுவர். 20,000 தொழில் வல்லுனர்கள் இக்கட்டிட நிர்மாணிப்பில் ஈடுபட்டிருந்தனர். ஆசிய நாட்டின் பல பாகங்களிலிருந்தும் திறமையான கலைஞர்கள் வரவழைக்கப்பட்டனர். பிரான்ஸ் நாட்டுத் தலைமை சார்ந்த ஒரு பொற்கொல்லர் Austin de Bordeauxவும் இப்பணியில் ஈடுபட்டிருந்தார். இதன் புற உருவப்படம் பின் இணைப்பில் தரப்பட்டுள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு புத்தகத்தைப் படிப்பது ஒரு புதிய நண்பனைப் பெறுவது போன்ற இனிய அனுபவம். அதே புத்தகத்தை மீண்டும் படிப்பது நெடுநாள் பிரிந்த நெருங்கிய நண்பனைத் திரும்பவும் சந்திப்பது போன்ற சுகமான அனுபவம்" என்கிறார் பொதுவுடைமைக் கொள்கையை உலகிற்கு வழங்கிய தத்துவஞானி கார்ல் மாக்ஸ். தனது பதவிக் காலத்தில் 'கனவு காணுங்கள்' என கல்லூரி மாணவர்களுக்குச் சொல்லி வந்த அப்துல் கலாம் நூல்களைப் பற்றிக் குறிப்பிடும்போது "நல்ல நூல்கள் நல்ல கனவுகளை வளர்க்கும், நல்ல கனவுகள் நல்ல எண்ணங்களை வளர்க்கும், நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களை உருவாக்கும்" என்கிறார்.

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளரும் கிறிஸ்தவ மாணவர்களின் ஆன்மீக வழிகாட்டியுமான அருட்பணியாளர் செ. ஜெயந்தன் பச்சேக் (அமதி) அவர்களின் 'எனது பயணங்களில்' என்ற நூல் கடந்த ஏப்ரல் மாதம் 30ம் திகதி மாலை 4.30 மணிக்கு வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரியின் பல்நோக்கு மண்டபத்தில் வெளியிடப்பட்டது. கல்லூரியின் தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டில் வெளியீட்டு விழா இடம்பெற்றது.

'எனது பயணங்களில்' என்ற இந்த நூல் ஜெயந்தன் அடிகளாரின் பயண அனுபவங்களை உள்ளடக்கிய கதைகளாகும். இந்நூல் வரலாறும் கற்பனையும் (Facts and Fiction) கலந்த பிரத்தியேக இலக்கிய வகையாகத் தெரிகின்றது. "இவை என் பயணங்களில் ஏற்பட்ட சில சுவாரஷ்யமான நிகழ்வுகளின் தொகுப்பு. நீண்டதும் குறுகியதுமான என் பயணங்களில் அனுபவிக்கக்கூடியவற்றின் பதிவுகள்" என ஜெயந்தன் தன் நூலை அறிமுகம் செய்கிறார். அத்துடன் இவை 'ஓய்வுநேரக் கதைகள்' என்றும் குறிப்பிடுகிறார். பொதுவாகவே சபையடக்கம் காரணமாகப் புலவர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் போன்றோர் தம் படைப்பைப் பற்றித் தாம் கூறும் போது சற்று 'அடக்கி'யே வாசிப்பார்கள். இவை வெறுமனே 'ஓய்வுநேரக் கதைகள்' என்பதற்கும் அப்பால் உண்மையில் இந்நூல் பல சிறப்புகளைக் கொண்டிருக்கிறது. இந்நூல் பற்றிய எனது இந்த மதிப்பீட்டில் இந்நூலின் சிறப்புகளைப் பல கோணங் களிலிருந்து வெளிக்கொணர்வதோடு இறுதியில் இந்நூலில் அடிகளார் கவனித்திருக்கவேண்டிய விடயங்களையும் சுட்டிக்காட்ட முனைகின்றேன்.

## கதைகள் ஒவ்வொன்றும் காலத்தின் பதிவுகள்

"இன்றைய செய்திகள் நாளைய வரலாறு" என்பார்கள். எனவே ஜெயந்தன் அடிகளார் இங்கே தன் காலத்து நிகழ்வுகளைத் தன் எழுத்துகள் மூலம் படம் பிடித்துக் காட்டி பதிவு செய்திருக்கின்றார். தன் சிறு பராயத்து பயண அனுபவங்களை, இந்தியாவுக் குச் சென்று அங்கு அகதியாக வாழ்ந்த வாழ்வை, ஒரு குருமட மாணவனாக, ஒரு குருவாக இன்றைய போராட்ட, யுத்த சூழ்நிலையில் அவர் அனுபவித்த வாழ்வியல் நெருக்கீடுகளை சிறப்பாகப் பதிவு செய்திருக்கிறார்.

திரும்பிய பயணம் என்ற 11வது கதையில் "அது *1985 மாசி 21ம் விடிகாலை. 'பரிசோதனை' என்ற பேரில்*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மனிதவேட்டை. நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்டனர். இலட்சக்கணக்கான ரூபாய் பெறுமதியான சொத்துகள் சூறையாடப்பட்டன. மூன்று சடலங்களை ஒரே குழியில் அடக்கம் செய்தோம். முன்னெப்போதும் நடந்திராத ஓரு பயங்கரம். வாய்திறந்து அழுவதற்குக்கூட துணிவில்லாத பயப்பிராந்தி. பரிதாபம் என்னவென்றால் கொல்லப்பட்டவர்களில் இருவர் தம் குடும்பங்களை இந்தியாவிற்குக் கடத்திவிட்டு தாமும் கடல் பயணத்திற்காகக் காத்திருந்த என் மாமாவும் சித்தப்பாவும். ஒரே வீட்டில் இரட்டை இழப்பு. தாங்கமுடியாத சோகம்"* என தனது குடும்பத்தின் சோகத்தைச் சொல்லுகின்றார்.

'ஹெலியும் கிலியும்' என்ற 26வது கதையில் *"குண்டு வீச்சுகளுக்கும் சாவுகளுக்கும் தவிர மற்ற எல்லாவற்றிற்கும் கடும் பஞ்சம் நிலவியது. 24 மணிநேர குண்டு மழை நகரை நரகமாக்கியிருந்தது. கற்குவியலாகவும் சாம்பல் மேடாகவும் காட்சியளித்த நகர்ப்புறம் வனாந்தர முகம் காட்டியது. பாடசாலை இயங்கவில்லை, குருமடம் இயங்கவில்லை, அலுவலகங்கள் இயங்கவில்லை, வைத்தியசாலைகளையும் சுடுகாடுகளையும் தவிர வேறு எதுவும் இயங்கவில்லை"* என யுத்தத்தின் கோர முகத்தைப் பதிவுசெய்கிறார்.

'கொம்படி' என்ற 30வது கதையில் "யாழ் குடாநாட்டிற்கான தரைவழிப்பாதைகள் எல்லாம் அடைக்கப்பட, ஒரு கையில் உயிரையும் மறுகையில் பொதியையும் சுமந்துகொண்டு ஆனையிறவு கடல் நீரேரி கடந்தனர் மக்கள். உயிர் உத்தரவாதம் அற்ற அந்த ஒரே வழிதான் கையிருப்பில் இருந்த ஒரேயொரு தரை மார்க்கம்" என அக்காலத்துப் பாதுகாப்பற்ற பயணத்தைப் பதிவுசெய்கின்றார்.


எனவேதான் இதை நான் 'காலத்தின் பதிவுகள்' என்று அழைக்க முனைகின்றேன். இந்நூலை எழுதியதின் மூலம் இவர் ஒரு சமூகக் கடமையை, வரலாற்றுத் தேவையை தன்னால் இயன்றளவு செய்திருக்கின்றார் எனலாம்.

## ஆர்வத்தைத் தூண்டுகின்ற எழுத்தோட்டம்

ஒவ்வொரு பயண அனுபவங்களிலும் தலைப்புகள் கச்சிதமாக, கவர்ச்சியாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு தலைப்பையும் வாசிக்கும்போது உள்ளே என்ன சொல்லப்போகின்றார் என்ற ஆதங்கம், ஆர்வம், அவசரம் ஏற்படுகிறது. 'கப்பல் கோச்சி', 'மன்னார் அரை ரிக்கற்', 'வாந்தியுடன் ஒரு பயணம்', 'மண் தாகம்', 'யாரு தம்பி நீங்க', 'கடல் கடந்த சயிக்கிள்' என்றவாறு இந்தத் தலைப்புகள் அமைகின்றன.

தனது துயரம் தோய்ந்த சொந்த அனுபவங்களை அவர் எழுதும்போது நாமும் அவரோடு சேர்ந்து அழத் தோன்றுகின்றது. பல நாட்களுக்குப் பின் யாழ்ப்பாணத்திலிருந்து தனது சொந்த ஊரான பேசாலைக்கு, தனது சொந்த வீட்டிற்கு வந்த அனுபவத்தை இப்படி எழுதுகின்றார். *"வெறிச்சோடிக்கிடந்த என் ஊர் வேற்றுமுகம் காட்டியது. எதிர்ப்பட்டவர்களிடம் பேசினேன். வீட்டார் அனைவரும் இந்தியாவிற்குத் தப்பிச்சென்றுவிட்டதாக விபரம் கூறினர். அகதி உணர்வு பரிச்சியமானதுதான். இப்பொழுது அனாதை உணர்வும் வந்தேறியது. வீட்டை நோக்கி நடந்தேன். உள்ளே நுழைந்தேன். "யாரு தம்பி நீங்க? உங்களுக்கு என்ன வேணும்?" என என் வீட்டில் குடியேறியிருந்த எவரோ என்னை விசாரிக்க அழுகை வந்தது"* என்கிறார்.

ஒவ்வொரு கதையையும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் நகர்த்திச் செல்கின்றார். ஒவ்வொரு பயண அனுபவமும் ஒரு சிறுகதை போலவே உள்ளது. சிறுகதைக்குரிய யுத்திகள் இங்கு கையாளப்படவில்லை எனினும் ஒரு விடயத்தை ஆரம்பிக்கும் முறையும், அந்த அனுபவத்தை நகர்த்திச் செல்கின்ற பாங்கும் அதை நிறைவுசெய்யும் முறையும் சிறுகதையை ஒத்திருக்கின்றன. இந்த அனுபவங்களை வாசிக்கும்போது எனக்குள் எழுந்த கேள்வி - "ஏன் ஜெயந்தன் புனைகதை இலக்கியத்திற்குள் இன்னும் காலடி பதிக்காமல் இருக்கிறார்?" என்பதே!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மண்வாசனை வீசுகின்ற வட்டார வழக்குகள்

அந்தந்தப் பிரதேசங்களில் வாய்மொழியாக, இலக்கண வரம்பின்றி, தொன்றுதொட்டு மக்களால் பேசப்பட்டுவரும் மொழியே வட்டார வழக்கு ஆகும். இக்கதைகளில் மண்வாசனை வீசுகின்ற மன்னார் பிரதேச வட்டார வழக்குச் சொற்கள் நிறையவே கையாளப்பட்டிருக்கின்றன. 'மாஜா பஜார் - ஒரு சினிமாப் பயணம்' என்ற 3வது கதையில் "அம்மம்மாவிற்கு **ஐஸ் வைத்து** அனுமதி வாங்கி விட்டேன்" என்கிறார். மண்தாகம் என்ற 23வது கதையில் "மண் தாகம் வந்து **சிப்பிலியாட்டியது**" என்கிறார். "வாய் திறந்து அழுவதற்குக்கூட துணிவில்லாத பயப்பிராந்தி" 'விறகு வாங்க லையோ? விறகு' என்ற 14வது கதையில் "**விறுசாக** நடந்து வேகமாகத் திரும்பிவந்து சேரும்போது மணி ஆறாகிக்கொண்டிருந்தது" "மாற்றான் **சம்பாத்தி யத்தில்** சுகம் அனுபவித்தோம்" என்கிறார். "சில மிருகங்களுக்கு **உசுப்பேத்தி** மகிழ்ந்தோம்" **பிரா ணன், சூதானம், கொசுறு** என பல வட்டார வழக்குச் சொற்கள் கையாளப்படுகின்றன.

### புதிய வார்த்தைப் பிரயோகங்கள்

சிலர் தமிழ் எழுதும்போது ஆங்கிலச் சொற்கள் கலந்து எழுதுவதை ஒரு மேதாவித்தனமாகக் கருதுகின்றனர். குறிப்பாக தமிழ்நாட்டு எழுத்தா ளர்கள் இதில் முன்னிடம் வகிக்கின்றார்கள். ஏதோ தமிழால் சிலவற்றை வெளிப்படுத்த முடியாது என்ற நினைப்பு அவர்களுக்கு. "சொல்லுந் திறமை தமிழ்மொழிக்கில்லை என்று எந்தப் பேதை உரைத்தான்?" என்று பாரதி பாய்ந்தது இப்படிப்பட்ட வர்களை நோக்கித்தானோ?

இந்நூலில் ஜெயந்தன் சில ஆங்கிலச் சொற்பதங்களுக்கு அழகான, துல்லியமான தமிழ்ச் சொற்களைக் கையாள்கின்றார். உதாரணத்திற்குச் சில சொற்கள் Nostalgia - துய்த்தவற்றிற்கான ஏக்கம், Tea Break - தேனீர் முறிப்பு, Citezenship - வாழ்விட அனுமதி, Horn - ஒலிப்பான் போன்றவை இந்நூலில் இடம்பெறுகின்றன.



பேராசிரியர் கா. சிவத்தம்பி போன்றவர்கள் தமிழில் புதிய சொற்கள் உண்டாக்கியுள்ளனர். அதே வரிசையில் ஜெயந்தன் அடியாரும் சில புதிய சொற்களை உண்டாக்கி கையாள்கின்றமை பாராட்டுக்குரியது.

'மண்தாகம்' என்ற 23வது கதையில் "சுப்பிரமணிய பூங்காவில் உல்லாசித்ததும் பின்பு ஞானம்ஸ் ஸ்ருடியோவில் கறுப்பு வெள்ளை புகைப்படம் எடுத்ததும் யாழ் ஞாபகங்களில் எஞ்சியவை" என்கிறார். இங்கே 'உல்லாசம்' என்ற பெயர்ச்சொல் 'உல்லாசி' என்ற வினைச் சொல்லாக மாற்றப்பட்டுள்ளது. "எழுத்தையும் எண்ணத்தையும் கணினித்த அருட்சகோதரர் அமிர்தராஜ் அவர்களுக்கு நன்றி'. என்ற வசனத்தில் கணினி என்ற பெயர்ச்சொல் வினைச் சொல்லாகக் கையாளப்பட்டுள்ளது. "இருக்கை தேடினோம் 'நிற்கை'யே கிடைக்குமோ என்ற சந்தேகம்" என்ற வசனத்தில் 'நிற்கை' என்ற புதிய சொல்லைக் கையாள்கிறார்.

– தொடரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 64 விடைகள்

அபிசூ, பிள்ளைகள், லேவியரை, சீனாய், கோகாத்தியர், இஸ்ரயேல், லேவியர், செக்கேலில், புதல்வருக்கும்

## அறிவை வளர்ப்போம் - 64 விடைகள்

1) பெற்றோல் 2) உரோம் 3) சீனா 4) 1330
5) சிறக்கப் போ 6) பெயரெச்சம்

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதி ரூபா 200/= பரிசு பெறுவோர்**

- தொ. மேரி திரேசா,
புதுக்குடியிருப்பு,
வாழைச்சேனை.
- இருதயநாதன் டினோஜன்,
புதுக்குடியிருப்பு,
வாழைச்சேனை.

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- செ. மரியரோஸ் (ஆன் சறோமியா),
திருக்குடும்பக் கன்னியர் இல்லம்,
வங்காலை.
- மரியான்பிள்ளை நிமலன்,
20/5, தோம்புதோர் வீதி,
ஏறாவூர் - 05

**பாராட்டுப் பெறுவோர்**

- I. A. C. S. நக்சிக்கா
- ஜேசுராஜ் கார்த்திகா

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 16 முடிவுகள்**

- **முதலாம் பரிசு** - 300/=
ர. பிரசாந்,
11ம் குறுக்கு,
திருப்பெருந்துறை,
மட்டக்களப்பு.
- **இரண்டாம் பரிசு** - 200/=
P.எல்ரோய்,
333, அன்புவழிபுரம்,
திருகோணமலை.
- **3ம் பரிசு** - 100/=
கனகலிங்கம்-விஜய்,
சின்ன முகத்துவாரம், அக்கரைப்பற்று - 09.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத்திகதி
31- 07 - 2008




# விவிலியம் கற்போம் - 67

(எண்ணிக்கை 5:1–30)

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

ஆண்டவர் மோசேயிடம் கூறியது; தொழுநோயர், வெட்டையுள்ளோர், பிணத்தால் தீட்டுப்பட்டோர் அனைவரையும் பாளையத்துக்குப் புறம்பாக்குமாறு இஸ்ரயேல் மக்களுக்குக் கட்டளையிடு. மக்களிடையே நான் தங்கியிருக்கும் .................................... புறம் பாக்குமாறு கட்டளையிடு. நான் தங்கியிருக்கும் பாளையத்தைத் தீட்டுப்படுத்தி விடாதபடி ஆணாயினும், பெண்ணாயினும் அவர்களைப் புறம்பாக்கிவிடுங்கள். ........................................... மக்கள் அவ்வாறே அவர்களைத் துரத்தி விட்டனர். ஆண்டவர் மோசேயிடம் சொன்னபடியே செய்தனர். ஆண்டவர் மோசேயிடம் கூறியது; இஸ்ரயேல் மக்களிடம் சொல்; மனிதர் ................................................ மீறிச் செய்யும் பாவங்களில் எதையும் ஓர் ஆணோ, பெண்ணோ செய்தால், தாங்கள் செய்த பாவத்தை அறிக்கையிட்டு, தீங்கிழைக்கப்பட்டவனுக்கு ஈடுகட்டி, அத்துடன் ஐந்தில் ஒரு பங்கைக் கூட்டிக் கொடுக்கவேண்டும். ............................................... தொகையைப் பெற்றுக்கொள்ள முறை உறவினன் இல்லையெனில், அந்தக் குற்ற ஈட்டுத் தொகை ஆண்டவருக்கு, அதாவது குருவிடம் சேரும்; இது குற்ற நீக்கத்துக்காகச் செலுத்தும் ஈட்டுப் பலி; ஆட்டைத் தவிர சேரவேண்டியது. ஒவ்வொரு மனிதனின் ............................................அவனுக்குரியவை. ஆனால், குருவுக்குக் கொடுப்பது அவனையே சேரும். ஒருவன் மனைவி நெறி தவறி அவனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தால், கணவன் தன் மனைவியைக் குரு முன் கொண்டுவரவேண்டும். அவளை முன்னிட்டுத் தேவைப்படும் பத்தில் ஒரு ............................................. வாற்கோதுமை உணவைப் படைக்க வேண்டும். அது குற்றத்தை நினைவூட்டக்கூடிய சினத்தின் உணவுப் படையல். குரு அவளை ஆண்டவர் முன் நிறுத்துவார். ஒரு மண் பாத்திரத்தில் ............................................... எடுத்து திருக்கூடாரத்தின் தரையில் இருந்து கொஞ்சம் துகள் எடுத்து நீரில் போடுவார். குரு அப்பெண்ணின் தலைமுடியைக் கலைத்துவிட்டு, வெஞ்சினத்தின் உணவுப்படையலாகிய நினைவுபடுத்தும் உணவுப் படையலை அவள் கைகளில் வைப்பார்; சாபத்தைக் கொண்டுவரும் ........................................... குரு தன் கையில் வைத்திருப்பார். அவளுக்குரிய தண்டனையை அவர் கூறியதும் அவள் "ஆமென், ஆமென்" என்பாள். இவற்றை ஓர் ஏட்டில் எழுதிக் கசப்பு நீரால் அவற்றை அழித்துவிடுவார்; அந்த நீரை அப்பெண் குடிக்கச் செய்வார். ............................................... கையிலிருந்து வாங்கி, அதை ஆண்டவர் முன்னிலையில் ஆரத்தியாகக் காட்டுவார், உணவில் ஒரு கைப்பிடி எடுத்து, பீடத்தின்மேல் எரிப்பார். அந்நீரை அவள் குடிக்கச் செய்வார். பாவம் செய்திருந்தால் வேதனையை உண்டாக்கும். ஆனால், ............................................ இருந்தால் ஒரு கேடும் வராது. இதுவே சட்டம்.

**விடைகள் :** ஏப்பா, புனிதப் பொருள்களும், புனித நீர், கசப்பு நீரையும், பெண்ணின், தூயவளாக, குற்ற ஈட்டு, ஆண்டவரை, இஸ்ரயேல், பாளையத்துக்கு

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி




## அறிவை வளர்ப்போம் - 67

(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)

1. அபிசீனியா என்றழைக்கப்பட்ட நாட்டின் இன்றைய பெயர்
   (றுவான்டா, எகிப்து, எத்தியோப்பியா)

2. உலகத்தின் மிக உயரமான பீட பூமி
   (பூட்டான், திபெத், நேபாளம்)

3. 'கெப்பிட்டல்' என்ற உலகப் புகழ் பெற்ற நூலை எழுதியவர்
   (கார்ல் மார்க்ஸ், லெனின், மாவோ சேதுங்)

4. முதன் முதல் இதயமாற்று அறுவைச் சிகிச்சை செய்த மருத்துவர் கிறீஸ்டியன் என் பேர்னார்ட் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
   (அமெரிக்கா, ஜெர்மனி, தென்னாபிரிக்கா)

5. சீரைத் தேடின்...........................................................
   (ஊரைத் தேடு, பேரைத் தேடு, ஏரைத் தேடு)

6. 'அண்ணா கொடு' என்பது
   (விளித் தொடர், எழுவாய்த் தொடர், வினைமுற்றுத் தொடர்)

பெயர் : ...............................................................................

முகவரி : ...............................................................................

...............................................................................

அனுப்பவேண்டிய முகவரி:

விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்- 67

தொண்டன்

அ. பெ. எண் - 44

மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## விவிலியம் கற்போம் - 65 விடைகள்

சந்திப்புக் கூடாரம், கோகாத்து, உடன்படிக்கை, நீலத்துணியை, கருஞ்சிவப்பு, துணைக்கலன்களோடு, தூயகம், ஊதா, சாகாதபடிக்கு, புதல்வரும்.

## அறிவை வளர்ப்போம் - 65 விடைகள்

1) வின்சன்ற் சேர்ச்சில்
2) கிட்டப்பார்வை
3) சோழர்
4) சிறிமாவோ பண்டாரநாயக்க
5) 30
6) இடவாகு பெயர்

**இரு பிரிவுகளுக்கும் சரியான விடை எழுதி பரிசு பெறுவோர் எவரும் இல்லை**

**ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடை எழுதி ரூபா 100/= பரிசு பெறுவோர்**

- எம். றுக்ஷிக்கா,
  28/2, பெரிய உப்போடை,
  மட்டக்களப்பு.
- K. சுவித்தா,
  புனித மகளிர் இல்லம்,
  தன்னாமுனை.

**சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 17 முடிவுகள்**

- **முதலாம் பரிசு** - 300/=
  செல்வி டினுஷா-
  -குருச்சந்திரன்,
  57, பாத்திமா வீதி,
  திருகோணமலை.
- **இரண்டாம் பரிசு** - 200/=
  டிரோன் ஸ்டீபன்
  மாட்டில்,
  மாயழகு வீதி,
  அக்கரைப்பற்று.
- **3ம் பரிசு** - 100/=
  அகஸ்டிக்கா-
  -தேவதாசன்,
  6/2, பிரதான வீதி,
  புதூர்,
  மட்டக்களப்பு.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org